# Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No.CC . No. 36/2023
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –7

| | | | |
|---|---|---|---|
| Name: | ராமமூர்த்தி | Calling: | உதவி ஆய்வாளர், ஓய்வு |
| Father's/Husband's Name: | சாமுநாயுடு | Religion: | |
| Village: | ஜோலார்பேட்டை | Age: | 60 |
| Taluk: | திருப்பத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 02.07.2026 நேரம் : 03.48 PM

(எதிரி ஆஜர் . )

அ.சா.7 முதன்மை விசாரணை.

இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. செல்வமதி என்பவருக்காவும் சேர்த்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கவும் அவர்கள் தாயரித்த ஆவணங்களை இந்த சாட்சியம்மூலம் குறியீடு செய்யவும் கற்றறிந்த எதிரிகளின் தரப்பு வழக்கிறஞர் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார்.

நான் கடந்த 31.05.2026 ம் திருப்பத்தூர் மாவட்ட குற்ற ஆவண காப்பத்தில் உதவி ஆய்வாளராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 06.01.2023 ம் உதவி ஆய்வாளராக அம்பலூர் காவல் நிலையத்தில் பொறுப்பு அலுவலில் இருந்தபோது அம்பலூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ஜெயகுமார் என்பவர் அடிதடி சம்பவத்தில் சர்மிளா என்பவர் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக 02.01.2023 சிகிச்சையில் இருந்த போது விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று வந்து நிலைய CSR

5/2023 என வழங்கி இருந்ததை நான் பரிசிலினைக்கு எடுத்துக்கொண்டு காலை 10.00 மணிக்கு அதன்தன்மைகேற்ப அம்பலூர் காவல் நிலைய குற்ற எண் 5/2023 சட்டப்பிரிவுகள் 294(பி), 323 IPC r/w 4 of TNPHW Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் . புகார் வாக்குமூலம் ஏற்கனவே அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **முதல் தகவல் அறிக்கை அதசாஆ 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** புகார் மனுவின் அசலை முதல் தகவல் அறிக்கையுடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பினேன்.

பின்னர் நானே வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று 06.01.2023 காலை 11.00 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் பாலு, பிரகாசம் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன் . **பார்வை மகசர் ஏற்கனவே அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைபடம் அதசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சாட்சிகள் சர்மிளா, ஆறுமுகம், ரமணி, நந்தினி மற்றும் மகசர் சாட்சிகள் ஆகியவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை தேடிவந்த நிலையில் எதிரி ரமேஷ் என்பவரை 07.01.2023ம் தேதி பகல் 12.00 மணிக்கு அவரது வீட்டிடம் முறைப்படி கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இவ்வழக்கில் காயம்பட்ட நபரான சர்மிளா என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. செல்வமதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வாக்குமூலம் பதிவு செய்ததில் அவரை தெரிந்த ஒரு ஆண் நபர் 21.01.2023 ம் தேதி 01.15 மணிக்கு அவரது விட்டின் அருகே வைத்து கையால் முதுகு மற்றும் தலையின் மீது அடித்ததாக கூறினார். அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்றிதழ் பெற்றேன். **சர்மிளாவின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.த.சா.ஆ 5 குறியீடு செய்யப்படுகிறது**. அத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரி மீது 294(பி), 323 IPC r/w 4 of TNPHW Act இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். அவரது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் பிரிவு 161(3) குவிமுச ன் படி வாக்குமூலத்தில் உள்ளதை போல் தான் சொன்னார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

எதிரிக்கும் அ.சா.1க்கும் என்ன உறவு முறை என விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். அ.சா.1 ன் அம்மாவிற்கும் எதிரிக்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்துவருவதை நான் விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. எதிரியின் மனைவி வார்ட் மெம்பர் என்றால் சரிதான். திரியின் மனைவி வார்ட் மெம்பர் என்பதால் அ.சா.1 க்கும் குடும்பத்தாருக்கும் காழ்புணர்ச்சி உண்டு என்றால் அதுப்பற்றி நான் விசாரிக்கவில்லை . சம்பவம் நடந்த இடம் பழனிக்கும் ஜெனகனுக்கும் சொந்தமான இடம் என்றால் சரிதான். அந்த நேரத்தில் 10-20 நபர்கள் இருந்திருப்பார்களா என்றால் யாரும் இல்லை. அ.சா.1 ஐ மருத்துவபமனைக்கு அழைத்து சென்ற நபர் யார் என தெரிந்துக்கொண்டேனா என்றால் அவரின் அப்பா, அம்மா. விபத்து பதிவேட்டில் அவரின் சகோதரர் ஹரிஷ் அழைத்து வந்து சேர்த்தாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 மருத்துவர் விசாரிக்கும் போது மயக்கநிலையில் இருந்தார் என்றும் அவரது தகவல்களை அவரது தாயார் மருத்துவரிடம் கூறியதாக கூறியுள்ள நிலையில் நான் விசாரிக்கும் போது அ.சா.1 மயக்கநிலையில் இருந்தாரா என்றால் இல்லை. அ.சா.1 கொடுத்த புகாரில் பெண்மை இழிவுபடுத்தியதாக குறிப்பிட்டு கூறியுள்ளாரா என்றால் தகாத வார்த்தைகளால் அசிங்கமாக பேசியதாக கூறினார். பொதுவாக 4 of TNPWH Act பொது இடத்தில் பெண்களை இழிவுபடுத்தினால் மட்டும் தான் வரும் என்றால் சரியல்ல. அதுக்குறித்து மூன்றாவது நபர் புகார் அளித்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. அ.சா.1 தனது நீதிமன்றவிசாரணையில் அவரது பெண்மைக்கு இழிவு படுத்தியதாக எதிரியின் மீது எந்த ஒரு செயலையும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் மருத்துவரை தவிர மற்ற அனைவரும் அ.சா.1க்கு வேண்டி நபர்கள் என்று சொன்னால் சரிதான். எதிரியின் அக்காவும் அ.சா.1ன் அம்மாவிற்கும் நிலசம்மந்தமாக பிரச்சனை உள்ளது குறித்து விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். அதுப்போன்ற ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றாலும் அ.சா.1 அளித்த பொய்புகாரின் அடிப்படையில் எதிரியின் மீது தவறான வழக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயாரித்துக்கொண்டேன் என்றாலும் சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) ராம்மூர்த்தி

S SRIPATHI K
2026.07.04 13:54:53 +0530